<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S. No.289/2023 Date : 18-06-2025
பெயர் : பத்மா வாசா 1

சத்யப்பிரமாணம் செய்யப்பட்டார். பழைய எண் 19, புதிய எண் 40, சீனிவாசன் காலணி, சிவசங்கரன் தெரு, பம்மலில் வசித்து வருகிறேன். எதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்தீர்கள் என்றால் பிரதிவாதி ஏற்கனவே என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் சபாபதி தேவநேசன். மேற்படி சபாபதி தேவநேசன் எனது தகப்பனார் என்று ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் நான் பள்ளிப்படிப்பு மேற்க்கொள்ளாதால் பள்ளிப்படிப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி சபாபதி தேவநேசன் என்பவர் பிரதிவாதி தகப்பனார் என்றும் அவர் என்னுடைய தகப்பனார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நாகப்பன் என்கிற லாசர் என்றால் இல்லை. மேற்படி எனது தகப்பனார் பெயர் நாகப்பன் என்கிற லாசர் என்றாலும் அவர் காலமானப்பின்னிட்டு அவர் எனது தாயாரை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதியின் தகப்பனார் சபாபதி தேவநேசன் என்பவர் இறப்பு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சபாபதி தேவநேசன் என்பவரின் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளீரா என்றால் பெற்றுள்ளேன். மேற்படி வாரிசு சான்றிதழை பிரதிவாதி சாரால் என்பவர் பெற்றுத்தந்தார் என்கிற விவரம் இவ்வழக்கிலும் இதற்கு முன்பாக சொல்லியுள்ளீரா என்றால் சொல்லியுள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்யும்போது சபாபதி தேவநேசன் என்பவர் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சபாபதி தேவநேசன் வாரிசு சான்றிதழ் எவ்வாறு கிடைக்கபெற்றது என்றால் பிரதிவாதி என்னிடம் கொடுத்தார் எப்போது கொடுத்தார் என்றால் பிரதிவாதி என்னிடம் நல்ல முறையில் இருக்கும் போது கொடுத்தார். எப்போது பிரதிவாதி மேற்படி வாரிசு சான்றிதழை கொடுத்தார் என்றால் எப்போது என்று எனக்கு தெரியவில்லை. நான் மோசடியாக வாரசு சான்றிதழ் பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் அந்த வாரசு சான்றிதழை பெறவில்லை. தாவா சொத்து எனக்கு எப்போது எனக்கு எழுதிவைக்கப்பட்டது என்றால் 2011 ஆம் ஆண்டு

எழுதிவைக்கப்பட்டது. எனக்கு உடன்பிறந்த சகோதர சகோதரிகள் இருக்கும்போது எதற்காக தாவா சொத்தை எனக்கு எழுதி வைத்தார் என்றால் குடும்பத்தை நான் பார்த்து வருவதால் எனக்கு எழுதிவைத்தார். எனக்கு குழந்தைகள் உள்ளார்களா என்றால் இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளார்கள், எனது குழந்தைகள் யாருடன் உள்ளார்கள் என்றால் என்னுடன் தான் உள்ளார்கள். எனது மகன்கள் சென்னை மொவுண்ட் ரோடில் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. எனது தகப்பனார் உயில் ஆவணம் எழுதிவைத்ததன் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோரும் நிலையில் உயில் ஆவணம் எப்போது எழுதிவைத்தார்கள் என்றால் 2011ம் எழுதிவைத்தார்கள் தேதி நினைவில் இல்லை. மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது தகப்பனார் பிரதிவாதி பெயரில் எழுதிவைத்த ஆவணம்ப்பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி பெயரில் எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விவரம் எப்போது தெரியும் என்றால் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்தபின்பு வழக்கின் சம்மன் பெறப்பட்ட பின்பு மேற்படி விவரம் தெரியும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் முறையீட்டுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.